தலைமையகம்,
சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,
இல 23, புகையிரத நிலைய வீதி,
பம்பலப்பிட்டி
2017.06.29

சுற்றறிக்கை இல 12/2017

மேலதிக பணிப்பாளர் நாயகம்,
பணிப்பாளர்கள் / பிரதி உதவிப் பணிப்பாளர்கள்,
சகல படைப்பிரிவுகளுக்கும் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள்,
பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள்,

**அரசியல் உரிமைகளை அனுபவித்தல்**

தாபன விதிக்கோவையின் முதலாவது தொகுதியில் XXXII ஆம் அத்தியாயத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியல் உரிமைகளை அனுபவித்தல் தொடர்பான விடயங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

2. அதற்கிணங்க, சிவில் பாதுககாப்புத் திணைக்களம் ஆயுதம் தாங்கிய துணைப் படையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் திணைக்களமொன்றாக இருப்பதனால், இந்த திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர்கள், முகாரிகள், உப முகாரிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு ஆண் / பெண் அங்கத்தவர்கள் அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரிமையற்ற உத்தியோகத்தர் வகுதிக்குள் உள்ளடங்குகின்றனர்.

3. அதற்கமைய, ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்ற பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளுராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்புத் தேர்தல் ஆகியவற்றுக்கு வாக்களிக்கும் உரிமை தவிர்ந்த வேறு எவ்வகையிலான அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடுவது அவர்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க,

i. தேர்தலொன்றில் அபேட்சகராக போட்டியிடுதல்
ii. தேர்தலொன்றில் போட்டியிடும் அபேட்சகரொருவருக்கு எந்த வகையிலாவது உதவி செய்தல்
iii. அரசியல் கட்சியொன்றின் செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் உதவி செய்தல்
iv. அரசியல் கூட்டங்களில் உரை நிகழ்த்துதல்

என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

4. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரிமையற்ற இந்த திணைக்களத்தின் அங்கத்தவர்கள் அவ்வாறு அரசியலில் ஈடுபடுமிடத்து அது பாரதுாரமான துர்நடத்தையாக கருதப்படுமென தாபன விதிக்கோவையின் தொகுதி இரண்டு XLVII ஆம் அத்தியாயத்தின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு, இது தாபன விதிக்கோவையின் இரண்டாவது தொகுதியின் முதலாவது அட்டவணையின் கீழ் வரக்கூடிய பாரதுாரமான தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமொன்றாகவும் கருதப்படும்.

5. ஆகவே, தங்களுக்கு கீழால் உள்ள சகல அங்கத்தவர்களும் அரசியல் உரிமை அற்றவர்கள் என்பதை அறிவூட்டி மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென அறிவித்தல் வேண்டும்.

6. மேற்படி 3(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள படி எவரேனுமொரு அங்கத்தவர் தேர்தலில் வேட்பாண்மையை எதிர்பார்ப்பாராயின் தாபன விதிக்கோவையின் முதலாவது தொகுதி XXXII ஆம் அத்தியாயத்தின் 1.3 உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவையிலிருந்து இராஜினாமா செய்தல் வேண்டும்.

7. மேற்படி சுற்றறிக்கையை தங்களுக்கு கீழுள்ள சகல அங்கத்தவர்களும் அறிந்துகொள்ளும் பொருட்டு அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தவும். அவ்வாறு அறிவித்தல் பலகையில் இடப்பட்டதையும் இந்த சுற்றறிக்கை கிடைத்தமை பற்றியும் எனக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

**சந்திரரத்ன பல்லேகம**
**பணிப்பாளர் நாயகம்**